1986 நவம்பர் 19]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பாப்பாக்குடி ஒன்றியம் வடக்கு அரியநாயகிபுரம் ஊராட்சியில் 1982-83, 1983-84 மற்றும் 1984-85-ம் ஆண்டுகளில் குடிநீர்த் திட்ட பராமரிப்புக்கென ஆண்டுக்கு ரூ. 40,000 செலவிடப்படவில்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

தஞ்சை பேருந்து நிலையம்.

77—(*வினா எண் 9515) **திரு. ஆ. நடராசன் மற்றும் திரு. மு. இராமநாதன் :** மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை நகரில் உள்ள பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இந்தத் திட்டத்துடன் பயணிகள் தங்கும் விடுதியும் இணைக்கப்படுமா ?

(இ) இதன் மதிப்பீடு எவ்வளவு ?

(ஈ) பணி எப்போது தொடங்கும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) (இ) மற்றும் (ஈ) இவ்வினாக்களுக்கு இடமில்லை.

திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சைத் திருநகரில் இப்போது அமைந்துள்ள பேருந்து நிலையம் மிகக் குறுகிய இடத்தில் இருப்பதால் பக்கத்திலே திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து நிலையமும் இருப்பதால் அங்கே வந்துபோகிற பேருந்துகளுக்கும் மக்களுக்கும் வசதிகள் இல்லாத காரணத்தினால் பேருந்துகள் வந்து போகமுடியாத நிலை இருக்கிறது. அதை ஆலோசித்து இப்போதுள்ள நகரப் பேருந்து நிலையத்திற்குப் பக்கத்திலே உள்ள இடங்களை அப்புறப்படுத்தி அங்கே பேருந்து நிலயத்தை விரிவுபடுத்த முன்னதாகவே ஒரு திட்டம் இருந்ததே அதைப் பரிசீலனை செய்து அந்த நடவடிக்கையை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிற குறிப்பு என்னிடத்தில் இல்லை. தகவல் கேட்டு மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவிக்கிறேன்.

திரு. எஸ். இர்ராசாராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சையிலே அந்தப் பேருந்து நிலையம் மிக நெருக்கடியான நிலையிலே இருக்கிற காரணத்தினால் மேல் பகுதியிலே தொலை தூரம் செல்கிற பேருந்து நிலையமும், கிழக்குப் பகுதியிலே டவுன் பஸ்கள் போக்குவரத்துக்காக தனியாக பேருந்து நிலையமும் இருக்கிற காரணத்தினால் மக்கள் இங்கேயிருந்து அங்கே செல்வதற்கு நெருக்கடியாக இருக்கிறது. ஆகவே சுரங்கப் பாதை மூலமாக சாலையைக் கடப்பதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது எந்த கருத்துருவும் அரசினிடத்திலே இல்லை.

திரு. ந. சிவஞானம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தஞ்சை நகராட்சிப் பேருந்து நிலையம் மிகவும் நெருக்கடியான இடத்தில் இருக்கிறது. வெளியூர் பேருந்து நிலையத்திற்கும் நகரப் பேருந்து நிலையத்திற்கும் தனியாக நிலையம் ஏற்படுத்த அரசுக்கு யோசனையுண்டா ? நகரசபை அதை ஏற்படுத்தி வருகின்றார்கள். தனியாக ஏற்படுத்துவதற்கும் குறிப்பாக அந்தப் பேருந்து நிலையத் தொழிலாளர்களுக்கு சுகாதார வசதி, கக்கூஸ் வசதி போன்றவற்றையும் கட்ட அரசு உத்தர விடுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அப்படிப்பட்ட எண்ணம் எதுவும் இல்லை.

திரு. துரை கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை பேருந்து நிலையத்திற்கு அருகாமையிலே மருத்துவமனைக்கு சொந்தமான இடம் இருக்கின்றது. அங்கே இருக்கும் அந்த இடத்தை பேருந்து நிலையத்திற்கு பயன்படுத்துவதன் மூலம், மருத்துவ வசதிகளைப் பெறலாம். தற்போது உள்ள போக்குவரத்து நெரிசல் காரணமாக அங்கே தாமஸ் ஹாலில் இருந்து நோயாளிகளை எடுத்துச் செல்வதற்கும் இடையூறாக இருக்கின்றது. இந்த இடையூறுகளை நிவர்த்தி செய்ய மருத்துவ மனைக்குச் சொந்தமான இடத்தில் பேருந்து நிலையம் அமைக்க யோசனை உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

மதுரைக்கு துப்புரவுப் பணிக்குப் புதிய லாரிகள்.

78—(*வினா எண் 9708) திரு. மு. மாரிமுத்து: மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாநகராட்சியின் துப்புரவுப் பணிக்காக புதிய லாரிகள் வாங்கிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?